1149
24 SEP 1917
1149
3.17

உ

ஸ்ரீமத்

விராட் விஸ்வப்பிரம்ஹணே நம:

# விஸ்வப்பிராமணப் பட்டம்.

இது

சேலம்ஜில்லா கடத்தூர்

வி. வரதாசாரியாரவர்கள்

தஞ்சை ஜனானுகூலன் பத்திரிகையில்

விஸ்வப்பிராமணர்களைப்பற்றிஎழுதியசந்தேகவினாவும்

---

தஞ்சாவூர் தெற்கு இராஜவீதி

பிரம்மஸ்ரீ சா. சுந்தராச்சாரிய ரவர்களால்

தக்க ஆதாரத்துடன் சந்தேகநிவர்த்தி என்று

ஷை பத்திரிகையில் எழுதிய விடையும்,

---

கும்பகோணம் புதுப்பாளையத் தெரு

பிரம்மஸ்ரீ த கு. சுந்தராச்சாரிய ரவர்கள்

விஸ்வப்பிராமணர்களைப்பற்றிய

ஓர் சந்தேகம் தெளிதல் என்ற ஷை பத்திரிகையில்

எழுதிய விடையும் சேர்த்து

---

சென்னை சிந்தாதிரிப்பேட்டை,
...க்தாரண அச்சியந்திரசாலையிற்
...பிக்கப்பட்டது.

...d Copy-right,

...917. [அணா 4-

Y5923
N17
145763

உ

ஸ்ரீமத் விராட் விஸ்வப்பிரம்ஹணே நம:

# விஸ்வப்பிராமணப் பட்டம்.

1149
3.17
SEP 1917
MADRAS



1911ஆம் பிப்ரவரிமீ 25உ

தஞ்சாவூர் ஜனனுகூலன் பத்திரிகையில்

ம்மாளர்களை விஸ்வப்பிராமணரென்று சொல்வதற்கு
சாஸ்திர புராணாதிகளின் ஆதாரமிருந்தால் அதை
அறிய வெகுஜனங்கள் விரும்புகிறார்களென்று

சேலம்ஜில்லா கடத்தூர்

வி. வரதாசாரியார் எழுதிய

சந்தேக வினாவிற்கு

தஞ்சாவூர் தெற்கு இராஜவீதி

பிரம்மஸ்ரீ சா. சுந்தராச்சாரியார் எழுதிய

சந்தேகநிவர்த்தி விடை.

இதன் விலை] 1917. [அணா 4.

விஸ்வகுலோத்தாரண பிரஸ், சிந்தாதிரிப்பேட்டை.

உ

விஶ்வப்பிரஹ்மணே நமஃ

# முகவுரை.

ஸ்ரீமத் விராட், ஸுவராட், ஸாம்ராட், பர சிவ ஸர்வ பரிபூரண முழுமுதற் கடவுளாகிய விஶ்வகர்மாவின் சத்தியோஜாதாதி பஞ்சானனோத்பவர்களாகிய ஸானக, ஸனாதன, அபுவனஸ, பிரத்னஸ, சுபர்னஸ ரென்னும் பஞ்ச ரிஷிகளின் மானஸ புத்திரர்களாகிய மநு, மய, துவஷ்ட, சில்பி, விஶ்வக்ஞரென்னும் பஞ்சப்பிரம்ம சந்ததிகளாகிய நற்குலாபிமான்களுக்கு தஞ்சாவூர் தெற்கு இராஜ வீதி சா. சுந்தராச்சாரியார் தெரிவித்துக் கொள்வது யாதெனில்:—

விஶ்வப்பிரம்ம சந்ததியார்களைப்பற்றி தூஷணையாக பத்திரிகை வாயிலாகவும், புத்தகமாகவும், மதப்பேய்பிடித்த சில துராபிமானிகள் அச்சிட்டு பிரசித்தி செய்திருக்கிறார்கள். அவர்கள் பெயர் ஊர் பிரசுரம் செய்த சாராம்சத்தின் சுருக்கம் அடியில் வருமாறு காண்க.

1. சேலம் ஜில்லா கடத்தூர் ஸி. வரதாசாரி என்பவர் 1911ஸு பிப்ரவரிமீ 25உ தஞ்சாவூர் ஜனானுகூலன்பத்திரிகையில் ஓர் சந்தேகம் என்று தலையங்கம் சூட்டி கவர்ன்மெண்டாரால் எடுக்கப்பட்ட சென்ஸஸ்கணக்கில் விஶ்வப்பிரம்ம சந்ததி

யார்களை கவன்ர்மெண்டார் உத்தரவின்படி விஸ்வப்பிராமணஜாதி என்று பதிவு செய்துகொண்டதைப்பற்றி ஷை ஐயங்கார் மனுஸ்மிருதியில் கண்ணாளர்கள் உற்பத்தி செட்டிச்சிக்கும், சூத்திரனுக்கும் பிறந்தவன் ஆயோகவன், அவன் தொழில் தச்சத்தொழிலென்று புத்த நிகண்டு அமரத்தில் சூத்திரவர்க்கத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் கூறியிருந்தனர். அதற்கு பதில் மறுப்பு விஸ்வப்பிராமணர்களைப் பற்றிய ஓர் சந்தேக நிவர்த்தி என்று தலையங்கம் சூட்டி வேதசாஸ்திரங்களைக் கொண்டு விஸ்வப்பிராமணீகத்தை நிரூபணஞ்செய்து ஷையார் பிரசுரித்த பத்திரிகையில் பதில் நானும் பிரசுரித் திருக்கிறேன். ஐயங்கார் அவர்கள் என் வினவிற்கு சுருதியுக்தி அனுபோகமாய் பதில் சொல்லும் பக்ஷத்தில் ரூபா 100 கொடுப்பதாக கெஜட்டில் விளம்பரம் செய்திருந்தேன் நாளது வரையில் பதில்இல்லை.

2. வது சேலம் சுகவனபுரி சு. அர்த்தநாரீச நாயகவர்மா என்னும் பெயர்பெற்ற படையாச்சியார் என்பவர் வன்னியவம்ச பிரகாசிகை என்ற ஓர் புத்தகம் நூதனமாக கற்பித்து அதில் சாதுர் வர்ண வுற்பததியும் அதன் சிரேஷ்டத்தையும் விளக்கி மற்ற ஜாதியார்கள் கலப்புஜாதியார்களென்றும் அவர்ள் குருக்கள், குயவன், வளையக்கா

ரன், வாணியன், நட்டுவன், இடையன், சாத்தானி, பண்டாரம். விஸ்வகர்ம சந்ததி ஐவர்களையும், சங்கரசாதி என்றும் விவரித்து ஷை படையாச்சி வம்சமோ அக்னிவம்சம் வன்னியகுல க்ஷத்திரியாள் பட்டப்பெயர் ராயர், பூபதி, நாயகர், ரெட்டி, துரை இன்னும் அனேகம் என்றும் தங்களை உயர்வாக வர்ணித்து எழுதி இருந்தார்.

3-வது தென்னாற்காடு ஜில்லா தாசில்தார் வீ. சொக்கலிங்கம்பிள்ளை என்பவர் சென்னையில் இண்டியன் ரிவியூ என்ற பத்திரிகையில் ஆங்கிலேய பாஷையில் தன்மனதிற்கு தோன்றியபடி வலசாரி இடசாரி கலகத்தைப்பற்றி சரித்திரம் பிள்ளையவர்கள் அலாவுதீன் கதைக்கு ஒப்பாக எழுதி இருந்தார். மேற்கண்ட மூவர்களுக்கும் விஸ்வப்பிரம்ம சந்ததியார்கள் யாதொரு தீங்கும் செய்யவில்லை. நன்மையே செய்திருக்கிறார்கள். பாபிகள் காக்கப்பட்ட காமதேனுப்பசுவை காட்டில் துரத்திவிட்டு கழுதையை கட்டி தீனி போட்டாப்போல் உண்மை தெரியாமல் மனுஸ்மிருதி பாராசரஸ்மிருதி வைத்திநாத தீக்ஷிதீயம் அமரம் இந்த தாமசபுராண இதிகாசங்களை சிறுது பார்த்துவிட்டு விஸ்வப்பிராமண ஜாதியார்களை தூஷிக்க வந்திருக்கிறார்கள். முதல் வாதம் செய்து கேள்விகேட்டவர் ஐயங்கார் அவர்களுக்கு பதில்

பத்திரிகை மூலமாய் வெளியிட்டதை இப் புத்தகத்தில் அச்சிடப்பட்டிருக்கிறோம். மற்ற இருவருக்கும் விடையளிக்க சிலவிஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அச்சிட பொருள் சகாயம் செய்வாரில்லை. ஜாதி கலகத்துக்கு சிலசங்கரஜாதி ரிஷிகளால் கற்பிக்கப்பட்ட புராண விருக்ஷங்களிருக்கின்றன. அவ்விருக்ஷத்தை வேரோடு களைந்து எறியப்பட்டாலொழிய ஜாதி கலகம் விலககமாட்டாது. விருக்ஷத்தின் பெயர்களாவன:— மனுஸ்மிருதி, வைத்திநாத தீக்ஷிதீயம் பராசரஸ்மிருதி, வியாசஸ்மிருதி, அமரம், கருடபுராணம், வன்னியபுராணம் இதுகளுக்கு மறுப்பு, சுருதி யுக்தி அனுபோகத்தால் என்னால் எழுதப்பட்டிருப்பதால் அதை அச்சிட்டு பூர்த்திசெய்வது விஸ்வப்பிரம்ம சந்ததியார்களுக்கு முதன்மையான குலதர்மமாக இருக்கும். பொருள் சகாயம் இனமாக செய்யாவிட்டாலும் நற்குலாபிமானிகள் புத்தகத்துக்கு சந்தாதாரர்ளாக சேருப்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

முன்சேரும் சந்தாதாரர்களுக்கு புத்தகவிலை ரூபா 2-வீதம் கொடுக்கப்படும். சாஸ்திரத்தின் பெயர் தர்மசாஸ்திர ஆபாச வினு விடை.

இப்படிக்கு பொதுநலப்பிரியன்,
**சா. சுந்தராச்சாரியார்,**
தெற்கு இராஜவீதி, தஞ்சாவூர்.

ஸ்ரீமத் விராட் விஶ்வப்பிரம்ஹணே நமஃ

# விஶ்வப்பிராமணப்பட்டம்.

ஜனனுகூலன் தஞ்சாவூர் 25—2—11.

## ஓர் சந்தேகம்.

இப்போது எடுக்கப்பட்டுவரும் ஸென்ஸஸ் என்கிற கனிஷுமாரிக் கணக்கில் பற்பல ஜாதியரைக் குறித்து ஏற்பட்டிருக்கும் பாகுபாட்டிற்கிணங்க கம்மாள ஜாதியாருட் சிலர் விஶ்வப்பிராஹ்மணர் எனப் பதிவுசெய்து கொள்ளப்படுகின்றனர். அப்படிச்சொல்ல சாஸ்திரபுராணுதிகளில் ஆதாரம் இருந்தால் அதை அறிய வெகு ஜனங்கள் விரும்புகிறுர்கள். மனுஸ்மிருதி பத்தாவது அத்தியாயம் 12-வது பிரிவில் வைஸ்ய ஸ்திரீக்கும் சூத்திரனுக்கும் பிறந்தவன் 'ஆயோகவின்' என்றும், 48-வது பிரிவில் ஆயோகவனிட தொழில் தச்சத் தொழிலென்றும்,— சமஸ்கிருத அமரத்தில் தச்சன், தட்டான், கருமான் இவர்கள் சூத்ரவர்க்கத்தவர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸி. வரதாசாரியார்,

கடத்தூர், சேலம்ஜில்லா.

ஜனனுகூலன் தஞ்சாவூர் 11—3—11.

# விஸ்வப்பிராஹ்மணர்களைப் பற்றிய ஓர் சந்தேக நிவர்த்தி.

இப்போது எடுக்கப்பட்டுவரும் ஸென்ஸஸ் என்கிற கனிஷ்மாரிக்கணக்கில் பற்பல ஜாதியாரைக் குறித்து ஏற்பட்டிருக்கும் பாகுபாட்டிற்கிணங்க கம்மாள ஜாதியார்களை விஸ்வபிராஹ்மணர்களென்றுபதிவுசெய்துக்கொள்ளப்படுவதைக் கண்ணுற்ற சேலம்ஜில்லா கடத்தூர் ஸி. வரதாசாரியார் என்பவர் மனுஸ்மிருதி பத்தாவது அத்தியாயம் 12-வது பிரிவில் வைஸ்ய ஸ்திரீக்கும் சூத்திரனுக்கும் பிறந்தவன் "ஆயோகவின்" என்றும், 48-வது பிரிவில் ஆயோகவனிட தொழில் தச்சத் தொழிலென்றும் ஸமஸ்கிருத அமரத்தில் தச்சன். தட்டான், கருமான் இவர்கள் சூத்திர வர்க்கத்தவர்களென்றும் சொல்லப்பட் டிருக்கிறதாகவும் விஸ்வபிராஹ்மணரென்று சொல்ல சாஸ்திர புராணாதிகளில் ஆதார மிருந்தால் அதை அறிய வெகு ஜனங்கள் விரும்புகிறதாகவும், 25-2-11ல் ஜனனுகூலனில் பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் கண்ணுற்ற யான் ஷை வரதாசாரியாரும் வெகு ஜனங்களும் அறியும்பொருட்டு விஸ்வபிராஹ்மணருடைய பூர்வீகமாயுள்ள வேதசாஸ்திரங்களை இங்கு விவரிக்கலானேன்.

1. (யஜுர்வேதம்) நான்காவது காண்டம் மூன்ருவது பிரஸ்னம், ஐந்தாவது ஆருவது பஞ்சாதிகளிற் சொல்லும் வேதவாக்கியத்தில் விஸ்வகர்மா வென்னும் பெயருடைய பஞ்சமுகப் பிரம்மாவின் "ஸத்யோஜாதமுகம்" என்னும் கிழக்கு முகத்தி லிருந்து ஸானகரிஷியும், "வாமதேவமுகம்" என்னும் தெற்கு முகத்திலிருந்து ஸநாதனரிஷியும், "அகோரமுகம்" என்னும் மேற்கு முகத்திலிருந்து அபுவனஸரிஷியும், "தற்புருஷமுகம்', என்னும் வடக்கு முகத்திலிருந்து பிரத்னஸரிஷியும், "ஈசான்யமுகம்" என்னும் ஊர்த்வ முகத்திலிருந்து ஸுபர்னஸரிஷியும் பிராம்மண ஜாதிகளாகப் பிறந்திருக்கிருர்கள். மேற்சொன்ன ஐந்து பிரம்மரிஷிகளுக்கும் வேதப் பிரமாணங்களின்படி,

சுருதி.

ஸத்யோஜாதமுகமாஸீத் மநு விஸ்வகர்மணே பிரம்ஹண உத்பத்தி:—

வாமதேவமுகமாஸீத் மய விஸ்வகர்மணே பிரம்ஹண உத்பத்தி:—

அகோரமுகமாஸீத் த்வஷ்ட விஸ்வகர்மணே பிரம்ஹண உத்பத்தி:—

தத்புருஷமுகமாஸீத் சில்பி விஸ்வகர்மணே பிரம்ஹண உத்பத்தி:—

ஈசானமுகமாஸீத் விஸ்வக்ஞ விஸ்வகர்மணே பிரம்ஹண உத்பத்தி:—

என்னும் வேத வாக்கியத்தின்படிக்கு ஸானக ரிஷி மநு ஆச்சாரி ரூபத்தோடும், ஸனாதனரிஷி மய ஆச்சாரி ரூபத்தோடும், அபுவனஸரிஷி த்வஷ்ட ஆச்சாரி ரூபத்தோடும், பிரத்னஸரிஷி சில்பாச்சாரி ரூபத்தோடும், சுபர்னஸரிஷி விஸ்வக்ஞ ஆச்சாரி ரூபத்தோடும், ஷை பஞ்சமுகப் பிரம்மாவின் ஐந்து முகங்களிலிருந்தும் பிறந்தார்கள். தவிர:

(இருக்வேதத்தில்) சுருதி.

விஸ்வகர்மா மனஸாவிஸ்வம் சுரோதி, ததாதி பிராப்ஹணஸ் ஸுபர்ணஸரிஷி:—ஜானுதி பிராம்ஹண: கஸ்யப: பரப்ராப்ஹ மநுபிராம்ஹணேமரீச: யத்ரி, அங்கிரஸ, புலஸ்த்ய, புலஹ, பௌலஸ்த்ய, கஸ்யப, தக்ஷ, குக்குரு, நவப்ரம்ஹணே, ஏவிஸ்வப்பிராம்ஹணுஃ பிராப்ஹஸ்தக்ராஜந்தி, பிரம்ஹ விஷ்ணுர் மஹேஸ்வரோ, குருணும் குருஃ, விஸ்வகர்மா ஜகத்குருஃ, ஸபிதாப்பிரஜானும், ஸ்ரிஷ்டியாபுவனுனும், அஷ்டதிக் பாலகான், மனஸாஸ்வினீதேவதா, மனஸா ஏகாதசருத்ரான் மனஸாவிராட், விஸ்வமயம் காயத்ரீ, ஸமய இத்யாதி தேவதாஃ

என்னும் வேதவாக்கியத்தின்படி விஸ்வகர்மாவின் மனசினுல் சர்வ லோகங்களும் சிருஷ்டிக்கப்பட்டனவென்றும் அவ்விஸ்வகர்மாவே, ஆதிப்

பிரம்மாவாகிய பஞ்சமுகங்களுடைய ஸுபர்ணஸ ரிஷியென்றும், அவரே காசிபரிஷி யென்றும அவரே மறுப் பிரம்மாக்களாகிய மரீசி, அத்திரீ, அங்கிரஸ, புலஸ்த்ய, புலஹ, பௌலஸ்த்ய, கஸ்யப, தக்ஷ, குக்குரு, இந்த ஒன்பது பிரம்மாக்களாளென்றும், விஶ்வகர்ம வம்சத்திற் பிறந்தவர்களை பிராம்மணரென்றும் மேற்சொன்ன வேத வாக்கியத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. தவிர,

(யஜுர்வேதம்) இரண்டாவது அட்டம் ஐந்தாவது பன்னம் முதலாவது அநுவாகத்தில்,

ஸ்ருதி.

விஶ்வரூபோ வைத்வாஷ்ட்ரஃ, புரோஹிதோ தேவானாமாஸீத், ஸ்வஸ்திரீயோஸுராணாம், த்ஸ்யத்ரீநிசீர்ஷாண்யாஸன், ஸோமபானங், ஸுராபான மன்னாதனங், ஸ்ப்ரத்யக்ஷம், தேவேப்யோ, பாகமவததேத், பரோக்ஷபமஸுரேப்யஃ, ஸர்வஸ்யை வைப்ரத்யக்ஷம்பாகம், வதந்தியஸ்மா ஏவாபரோக்ஷம், வதந்தி தஸ்யபாக, உதிதஸ்தஸ்மாதிந்த்ரோபிபேஜயீ, த்ரிங்மை வைராஷட்ரக்ங், விபர்யாவர்தயேதேதி, தஸ்யவஜ்ரமாதாயா, சர்ஷாண்யச்சினத்ஸோமபானக்.

என்றுசொல்லிய துவஷ்டப்பிரம்மாவின் குமாரராகிய விஶ்வரூபாசாரியர் தேவதைகளுக்கும்,

அசுரர்களுக்கும், ரிஷிகளுக்கும் புரோகிதராகி அவரவர்களின் இஷ்டசித்திகளைத் தந்தருளி யிருப்பதினால் அதே துவஷ்டப்பிரம்ம வம்சஸ்த ராகிய எங்களுக்குத் தேவப்பிராமணரென்று வேதசம்மதமாய்ப் பெயருண்டாயிற்று.

த. சா. சுந்தராச்சாரியார்.

***

ஜனானுகூலன் தஞ்சாவூர், 23—3—II.

ஷ பத்திரிகையின் தொடர்ச்சி.

(யஜுர்வேதம்) ஐந்தாவது அட்டம் ஒன்பதாவது அனுவாகத்தில் அஷ்டதிக்குப் பாலகர்களுக்கு அதிபதியாகிய விஸ்வகர்மாவைக் குறித்துச் சொல்லிய நிர்ணயமாவது.

சுருதி.

விஸ்வகர்மாதிசாம்பதிஸ்' ஸநோவஸுன்பாது ஸோஸ்மான், பாதுதஸ்மைநமஃ, ப்ரஜாபதீருத் ரோவருணோக்னித்திசாம்பதிஸ், ஸநோவஸுன் பாதுஸோஸ்மான் பாதுதஸ்மை நமஃ, ஏதாவை தேவதா, ஏதேஷாம்பசூனும், அதிபதிர்யேஸ் மாப்யோவா, ஏஷ அதிரிச்யதேயஃ, பசுசீர்ஷானு பததாதி ஏதாவைதேவதாப்யோ, நமஸ்கரோதி ப்ரம்ஹவாஜன:—

மேற்சொல்லிய வேதத்தில் அஷ்டதிக்குப் பாலகர்களுக்கும் மற்ற சகல தேவதைகளுக்கும், கோரிக்கைகளை யளிப்பதற் கதிபதியாகிய விஸ்வ

கர்மா விளங்குகிறார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தவிர, எல்லா வுலகங்களும் அவ்விஸ்வகர்மாவாலேயே சிருஷ்டிக்கப்பட்டதாக உபநிஷத் சுருதிப் பிரமாணத்திற் சொல்லப்பட்டிருக்கிற சுருதியின் அர்த்தமாவது:—

விஸ்வகர்மாவானவர் சகல திக்குகளுக்கு அதிபராயும், மநுஷ்யாளுக்கு எல்லாத் திறமைகளும் கொடுப்பவராயும், ஜயாபஜயங்கள் உண்டாக்குகிறவராயும், பிராமண தர்மமுடையவராயும், எல்லாதோத்திரங்களுக்கும் காரண கர்தாவாயும், ஐந்து பூதச் சொரூப முடையவராயும், விஸ்வகாரணமுடையவராயும், அவரிடத்திலேயே, பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் முதலான சகல தேவதைகளும் பிறந்தார்களென்றும், அவரே அந்தந்த தேவதைகளின் சொரூபமா யிருக்கிறாரென்றும், அவரைத்தவிர வேறுதேவதைக ளில்லையென்றும் ஷை உபநிஷத் சுருதிப் பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தவிர,

(யஜுர்வேதம்) ஏழாவது அட்டம் ஐந்தவாது பன்னம் ஐந்தாவது அநுவாகத்தில் முதலாவது பனசையில் ஷை சுருதியின் தாத்பர்யமாவது:- விஸ்வபிரம்மாவானவர் ஜலங்களை சிருஷ்டித்ததாகச் சொல்லி இருக்கிறதும் தவிர,

(யஜுர்வேதம்) பாரயத்தத்தில் மூன்றாவது அட்டம் அசுவமேத காடகம் முதலாவது அநு

வாகத்திலிருக்கும் இருபதிபனைசைகளேயும் இன்னமும் சுருதிப் பிரமாணமாய் உள்ள வித்தியாரண்ய பாஷியம் என்னும் கிரந்தங்களேப் பார்த்தீராளுல் விஸ்வப் பிராஹ்மணருடைய பூர்வீகம் தெரியவரும். தவிர,

(மூலஸ்தம்ப சுலோகம்.)

திதிரூப மனுப்ரோக்தம் வாரஸ்யமயசம்பவ:
நக்ஷத்ரம் த்வஷ்டரூபஞ்ச சில்பியோகந்தைவசா
விஸ்வஜ்ஞகாரணஞ்சைவ பஞ்சாங்கமதிதேவதா.

இந்த சுலோகத்தின்படிக்கு திதி மநுப்ரம்மா உற்பவம், வாரம் மயப்பிரம்மா உற்பவம், நக்ஷத்ரம் த்வஷ்டப்ரம்மாஉற்பவம், ரூபம் சில்பிப்ரம்மா உற்பவம், காணம் விஸ்வக்ஞப்ரம்மா உற்பவம் ஆனதால் விஸ்வப்ரம்மா ஐந்து பேர்களும் பஞ்சாங்கத்திற்கு அதிதேவதைகளாய்யிருக்கிறார்கள்.

(சில்ப்ப சுலோகம்)

விஸ்வப்ரம்ஹ குலேஜாதாகெர்ப்பபிராம்ஹண
நிச்சயம் சூத்ரத்வம் நாஸ்திதத்வம்சே பிராஹ்மணோ விஸ்வகர்மண:

என்பதனுல், விஸ்வகர்ம வமிசத்திற் பிறந்த எங்கள் குலத்தாருக்குக் கர்ப்பத்திலேயே பிராஹ்மணத்துவம் நிச்சயமாகவே யிருக்கிறதென்றும், விஸ்வகர்ம வமிசஸ்தர்களே பிராஹ்மணர்களென்றும். சிற்பசாஸ்திரம் ஐந்தாவ்து அத்தியா

யம் தேவதா நிர்மாணப் பிரகரணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

(புருஷஸூக்தத்தில்)

(சுலோகம்) பிராஹ்மணோ பகவான்ருத்ரோ க்ஷத்ரியப் பரமோஹரி:, வைசியப்பிதா மஹஸ்சைவ இந்த்ரசூத்ரஸ்ச ஜாயதே.

ஐந்து முகங்களிற் பிறந்த மநுப்பிரம்மாவாகிய ருத்திரனை பிராஹ்மணனென்றும், விஷ்ணுவை க்ஷத்திரியனென்றும், பிரம்மாவை வைசியனென்றும், இந்திரனை சூத்திரனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்காட்டிய வேதவாக்கியங்களினாலும், உலகத்துக்கு ஆதாரமாகிய சிற்ப சாஸ்திரத்திலும் மூலஸ்தம்பம் புருஷஸூக்தம்இத்தியாதி வேத சாஸ்திரங்களில் விஸ்வபிராஹ்மணரையே பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர்களென்றும், கோத்திரம், சூத்திரம், ஸாகை, பிறவரை முகோர்ப்பத்தி ஸ்தானங்களும் வேதங்களிற் சுட்டிக் காண்பித்திருக்கை யன்னியில் சில விப்பிரரிஷிகளையும் ஷெடி ரிஷிகளுக்கு உற்பவித்த விப்பிரானைப்பற்றியும் மேற்கூறிய வேதங்களில் ஒரு வரியாவது சொல்லப்படவில்லை.

கோத்திரம். சூத்திரம், சாகை, பிரவரை, முகோர்ப்பத்தி ஸ்தானங்களும விதிக்கப்படவி

ல்லே. தவிர, சத்தியவேதங்களில் விஸ்வப்ராமணு ளுக்கு ஆதாரம் கேட்க மறந்துவிட்டாரோயில்லே. வேதங்கள் அனுபோக பாத்தியம் தமது வசம் இருப்பதன்ருே. அது விஷயம் அவ்வேதத்தி லுள்ள விஸ்வேஸ்வரன் தான் அரியவேண்டும்.

வி. வரதாசாரியார் அவர்கள் மநுஸ்மிருதியை யும், அமரத்தையும் சத்தியவேதங்களாக பாவித் ததைப்பற்றி அடுத்தவாரம் மநுப்பிரஜாபதி உற் பவம் விபரமாய் எழுதப்படும்.

த. சா. சுந்தராச்சாரியார்.

***

ஜனனுகூலன்—தஞ்சாவூர், 5—4—11.

விராட் விஸ்வப்பிரம்மத்திற்கு அண்டாண்ட பிரம்மாண்டங்களே சரீரம். அது எப்படியென் ருல், பிரம்மனென்று சொல்லும் பிருதிவு அந்த விராட் விஸ்வப்பிரம்மத்திற்குப் பாதமென்றும், விஷ்ணுவென்றும், அப்பு தொப்புளென்றும், ருத் திரனென்னுந் தேயு மார்பென்றும், மஹேஸ்வர னென்னும் வாயு மார்புமுதல் புருவமத்தியமென் றும், சதாசிவமெனச் சொல்லும் ஆகாயம் சிர சென்றும்,பஞ்சபூத சொரூபமுடையவரென்றும், அந்தப் பிரம்மத்திற்கு சந்திரன் மனது திக்கு களே காது, விஷ்ணு தோள்கள், அக்கினியே வாக்கு, மிருதயூவே குதம், வாயுவே தொக்கு,

சூரியனே கண்கள், வருணனே நாவு, பூமிதே விபே மூக்கு, அந்திரியாமியே புருஷன், இவை களே அந்த விஸ்வப்பிரம்மத்திற்கு தேகமென்று வேதங்களும் சாஸ்திரங்களும் வித்தியாரண்ய ரால் செய்த ஞான நூல்களால் தெரியலாம். ஸ்வ யம்பு விராட் விஸ்வப்பிரம்மாவானவர் சுவயரூப மாயிருந்தார். அந்தஸ்வரூபத்தினின்றும், பஞ் சமுக சம்ராட்டாகிய விஸ்வப்ரம்மா உண்டாயி னார். அவருடைய சுவயரூப தியானமோவென் றால் சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானியம் என்னும் பஞ்சமுகத்தில் ஸானக, ஸனாதன, அபுவனஸ, பிரத்னஸ, சுபர்னஸ சாதியாருக்குள் 125 மகாரிஷி கோத்திர, ஆசிலாயன, ஆபஸ்தம்ப, காத்தியாயன, ரவுப்பி யாயன, போதாயன சூத்திரம், இருக்கு யஜுர் சாம, அதர்வண; பிரணவ, வேதபாராயணர்களா கியும், விஸ்வப்பிரம்ம புத்திரர் சுவாயம்பு மநுபிர ம்மாவின் பத்தினி அம்சத்தில் உதித்த புத்திரி, சதரூபை யென்ற பெண்ணை விவாஹம் செய்து அவளிடமிருந்து உதித்த புத்திரி பிரசூதியைபிர ஜைகளுக்கு பதியான பிரம்மபுத்திரன், விஸ்வகுல தக்ஷப்பிரசாபதி யென்ற பிர்க்கன் விவாஹம் செய்து, அவள் கெர்ப்பத்தில் பிறந்த புத்திரிக ளில் 60 பெண்களில் பதிமூன்று பெண்களை பிரம் மபுத்திரன் மரிசியின் குமாரர் காசிபரும், 27-

பெண்களைச் சந்திரனும் 10 பெண்களைத் தரும
தேவனும் விவாஹம்செய்து, அவர்களிடமிருந்து
சருவதேவ தயித்திய தானவ, புசங்க, கந்தருவ
அச்சரோகணங்களும் உண்டாகப்பட்டும் விஸ்வ
குல தக்ஷப்பிரசாபதிபுத்திரி சதிதேவியை பிரம்ம
புத்திரர் ருத்திர பகவானை பரமசிவம் விவாஹம்
செய்தும் விஸ்வகுல தக்ஷப்பிரசாபதியா விளங்கிய
தர்க்கனானவர் பரமசிவத்தை மதியாமல்நடத்திய
யாக ஓமகுண்டத்தில் தன் புத்திரி சதிதேவி
துவேஷித்து இறங்கி அங்கம் வெந்தும் இமய
மலை இராஜனுக்கு மேனாதேவி கெர்ப்பத்தில்
மறுஜென்மம் பார்பதியாய் பிறந்தும், தன்னை
நினைத்துக்கொண்டிருந்த பார்வதியைமறுபடியும்
ருத்திர பகவானை பரமசிவமே விவாஹம்செய்ய
அந்த விவாஹத்தில் எதிர்த்த அகஸ்தியரை பொ
திகைமலைக்கனுப்பி விஸ்வப்பிரம்மாவே ஆச்சாரி
யஸ்தானம்பெற்று விவாஹமஹோற்சவம் நடப்பி
வித்து ஆசிர்வாதமளித்து அதுமுதல் கல்ப்ப
முடிவுகாலம் வரையும் விஸ்வகுலகோத்திரக்கார்
களுக்கு ஆச்சாரியரென்று நாமகரணமுண்டாகப்
பட்டும். விஸ்வகுல தக்ஷப்பிரசாபதி புத்திரிகள்
பத்துபெண்களை முன் விவாகஞ் செய்திருந்ததரு
மதேவனுக்கு புத்திரர்களான அஷ்டவசுக்களில்
அக்கினிவசுவான அனலனுக்கு நாணற் புதரில்
சாக்ஷாத் சுப்பிரமணியக்கடவுள் பிறந்தும், விஸ்

வகுல தக்ஷப்பிரசாபதியின் முதலாவது புத்திரி அதிதி கெர்ப்பத்தில் காசிபருக்குப்பிறந்த விஸ்வ கர்ம ரூபியான சாக்ஷாத் சூரிய பகவானுடைய எட்டாவது வசுதேவனான பிரபாசனுடைய புத்திரர் விஸ்வகர்மாவின்புத்திரியானசமிக்கைசாயா தேவியை விவாஹம்செய்தும் அவர்கள் கெர்ப்பத்தில் பிறந்த சூரியபுத்திரர் எமதருமராசன்சுவர்க்க லோக அதிகாரம் பெற்றும் சாயாதேவி கெர்ப்பத்தில்பிறந்த சனீஸ்வர பகவானும் சர்வலோகஅதிகாரம்பெற்றும் ஷெ சமிக்கையினிடத்தில் தானே அஸ்வினி தேவதைகளும் பிறந்து மேல்கண்ட விஸ்வகர்மாவின் நாலாவது சகோதரர் துவஷ்ட பிரம்மாவே தேவேந்திரன் முதலிய 33-கோடி தேவர்களுக்கும் குருவாயிருந்தும் அந்தத் துவஷ்டாபுத்திரன் விஸ்வரூபாச்சாரியார் மௌனராயிருக்கும்போது துவஷ்டா யோகநிஷ்டைக்குப் போகவேண்டிய விஸ்வகர்மா துவஷ்டாவின் தாய்மாமனாராயிருந்த வியாழ பகவானை துவஷ்டாவே தேவகுருவாக நியமித்தும் அப்பால் மௌனர் நீங்கி விஸ்வரூபாச்சாரியார் தேவகுரு பட்டம் பெற்றும் தேவேந்திரன் யாகம் நடப்பிவிக்கையில் இந்திரன் தவறுதலாக விஸ்வரூபாச்சாரியை பிரம்மஹத்தி தோஷம்செய்து பிரம்மஹத்தி நீங்கும்பொருட்டு வைகை நதிக்கரையில்வந்து சிவாலய பிரதட்சணையும் மதுரைமா நகரத்தையும்

உண்டுசெய்து புத்தி சுவாதீனம் பிறந்தும் மேற் கண்ட விஸ்வகர்மா துவஷ்டாவுடைய கடைசி சகோதரர் ருத்திர பகவானுனவரே திரிலோகங் களிலும் ஏகாதச ருத்திர மூர்த்திகளாக விளங்கி வரப்பட்டார்கள்.

த. சா. சுந்தராச்சாரியார்.

***

## ௸ பத்திரிகையின் தொடர்ச்சி
## ஜனனுகூலன்—தஞ்சாவூர், 8-4-11.

தவிரவும், இந்த வைவசுத மநு அதிகாரத்தில் காசிபருக்கு அதிதி கர்ப்பத்தில் வாமன ரூபிபா ய்ப் பிறந்த விஷ்ணுபகவானே பூர்வம் சுவாயம்பு மநு அதிகாரத்திலும் மநுவின் புத்திரிகளில் மூன் சொல்லப்படுகிற பிரசூதியின் சகோதரி ஆகுதி கர்ப்பத்தில் மூண்டும் அவதரித்ததினலே விஸ்வப் பிரம்ம குலத்துக்கு விஷ்ணு பகவானே புத்திர பவுத்திர பேரப்பிள்ளையுமாகிருர். இப்படி பிரம்மா விஷ்ணு ஏகாதசருத்திராதிகளும் ஜனக ஜனந்தன ஜனக்குமார சானகாதி பஞ்சப்பிரம்ம ரிஷிகளும் கிருது புலஸ்த்தியாதி பிரம்ம ரிஷிக ளும் சூரிய சந்திர கிரணங்களும் கணேசர், சுப் பிரமணியர், மதன் இந்திராதி 33-கோடி தேவர் களும், எமதர்மராஜனும், அஸ்வனியாதி நக்ஷத் திரங்களும், அஷ்டவசு கருட, கம்புருட, சித்த வித்தியாதர, கெந்தருவர்களும், சதி பார்வதி,

லட்சுமி, சரஸ்வதி முதலிய தேவதா ஸ்திரீக ளும், மேற்காட்டிய பாந்தவ்ய காரணங்களாக விஸ்வப்பிரம்மவம்சமாய் இருப்பதற்கு வேதசாஸ் திரங்களுமே, வெளிப்படுத்தி இருப்பதினாலும், கிரேதாயுகத்திலும் ஆயிரத்தெட்டண்டமும் அறு நூற்றிருபத்தினாலு புவனமும், நிஷ்கண்டமாய், இராஜாதிகாரம் நடப்பிவித்த சூரபத்மனும் பிரம் மகுல விஸ்வகர்மாவின்புத்திரி பதுமகோமளையை பட்டமகி ஸ்திரீயாக விவாஹம் செய்யப்பட்டு அப்பால்திரேதாயுகத்திலும் சுவர்க்கமத்தியபாதா ளமென்ற திரிலோகாதீ ராச்சியாதிகாரஞ் செய்த விஸ்வபிரம்மகுல இராவணேஸ்வரனும், மயவிஸ்வ பிரம்மாவின், புத்திரி மண்டோதரியை பட்டமகி ஸ்திரீயாக விவாஹம் செய்யப்பட்டு மிருந்தும் அப்பால் துவாபரயுகத்தில் அனேக இராஜாக்கள் க்ஷத்திரியமுறை நடத்திவருங் காலத்தில் அப் போதே உலகத்தில் நூதனமாக பார்ப்பார்களு ண்டாகி க்ஷத்திரியாளிடம் நாங்களே பிரம்மகுல மென்று போதனைகளைப் போதித்த நிமித்தம் க்ஷத்திரியாள் வேதசாஸ்திரங்களைக் கவனியாம லும் விப்பிரானை குருவென்று பாவித்துக் கொண் டதினாலும் கலிகாலத்திற் காரம்பமாய் பராசர் வியாசர் சூதர்பிறந்தது அமிர்தத்தைவிஷமாகவும் விஷத்தைஅமிர்தமாகவும் ஜெகசாலப் புறட்டுகள் நடந்ததினால் க்ஷத்திரிய ராஜாக்களுடைய கோரிக்

கைகளுக்கு விஸ்வபிரம்மகுலத்தார்களிணங்காத கலந்துகொள்ளாத வர்ச்சிதம் செய்தார் விஸ்வப்பிரம்ம வம்சத்தார்கள் சமுத்திரமத்தியில் ஊசிக் காந்தத்தினால் கோட்டை யேற்படுத்தி அந்த மாந்தை நகரப்பட்டணத்தில் அநேக வருஷகால மிருந்தாண்டு ஷடி கோட்டைக்குக் காலகதியினாலும் வியாசர் மித்திரபேதத்தினாலும் க்ஷத்திரிய ராஜாக்களிடம் விஸ்வப்பிரம்மகுலத்தார் கலந்து கொள்ளாத விரோதத்தினாலும் ராஜாக்களுடைய முயற்சியினாலும் ஷடி கோட்டைக்குத் தீங்கு நேரிட்டு அதிலிருந்த விஸ்வப்பிரம்மகுலத்தார்கள் நானாதீவு கண்டங்களிலும் போயிறங்கி அந்தந்த தேசாசாரம் மதாசாரங்களை யனுஷ்டித்துக்கொண்டு அதுமுதல் இதுவரையிலும் இயந்திர தந்திர சித்திர விசித்திர சூத்திரங்களால் அற்புதங்களாகிய அநேக கோடாகோடி பஞ்சகிருத்தியாதிகளைச் சிருஷ்டித்தும் அதனால் உலகத்து ஜனங்கள் காலக்ஷேபங்களை நடத்தப்பட்டு வருகிறார்கள். விஸ்வப்பிராம்மணாளுடைய பூர்வீக விஷயங்களெல்லாம் சுருக்கமாய் எழுதினேம். மேற்கூறிய வேதங்களினாலும் சாஸ்திரங்களினாலும் விஸ்வப்பிரம்மாவின் புத்திரர்கள் சுவாயம்புமநு வென்று பரிஷ்காரமாய்த் தெரிகிறது. விஸ்வப்பிரம்மபுத்திரர் சுவாயம்பு மநு அல்லவென்று வேத சாஸ்திரங்களைக்கொண்டு கடத்தூர் ஸி. வர

தாசாரியார் நிரூபிப்பாராகில் அவருக்கு ரூ. 100 கொடுக்கப்படும்.

விஸ்வப்பிராமணஜாதி சா, சுந்தராச்சாரியார்,
நாணயகாரசெட்டி தெருவு,
தஞ்சாவூர்.

***

## விஸ்வப்பிராஹ்மணர்களைப் பற்றிய ஓர் சந்தேகம் தெளிதல்.

மனுஸ்மிருதி பத்தாம் அத்தியாயம் பிரிவு 12 லும், 48-லும் வைசியஸ்திரீக்கும் சூத்திரனுக்கும் பிறந்த ஆயோகவனுக்குத் தச்சத்தொழிலென்றும் அவனை தச்சன், தட்டான், கருமானென்றும், அமரநிகண்டில் சூத்திர வர்க்கத்தவர்களென்றும், 1911-ம் வரு பிப்பரிமீ 24வ சனிக்கிழமை தஞ்சாவூர் ஜனனுகூலன் பேப்பரில் ஓர் சந்தேகம் என்ற தலைப்பின்கீழ் ஒருவர் கூறுகிறார்.

அயோகவனுக்குத்தொழில் த்வஷ்டிஎன்றிருக்கிறது. த்வஷ்டிஎன்றால் மரம்தரிக்கிறதென்றருத்தமென்றதைக் கிஞ்சித்தும் தெரியாமல் கருமான் தச்சன், தட்டான் என்ற சப்தத்தில் பிரயோகமில்லாததையும் இதன்கூட சேர்த்திருக்கிறாரே. தவிரவும், மரம்வெட்டுகிற ஜாதியையும் மரவேலை செய்து ரதம் கிரகம்முதலான நிர்மாணம்செய்கிற ஜாதியையும் ஒன்றென்று சொல்லப்பட்ட இவரு

டைய புத்திஎவ்வளவு குடிலமாயிருக்கிறதென்று யார்தான் சொல்லமாட்டார்கள்! மேலும் இவர் சொல்லுகிற தெதுபோலிருக்கிறதென்றால், ஹரி என்பது குரங்குக்கும் விஷ்ணுவுக்கும் பெயரிருக்க விஷ்ணுவென்றால் குரங்குதானென்று ஸ்திரப்படுத்துவதுபோலிருக்கிறது.

இன்னமும் சிலர் சொல்லிக்கொள்வதான வசனம் வேறிருக்கிறது. அந்த வசனத்தைச்சொன்னாலும் ஏகதேசம் வாதத்திற்கு இடமுண்டாகும் அப்படிப்பட்ட வசனத்தை பிரஸ்தாபிக்கவேண்டுமானாலும் சுருதிக்கு விருத்தமில்லையோவென்று ஆம்லாசித்துதான் பண்டிதாளானபேர்கள் சொல்லவேண்டும். சுருதிதெரியாதவர்கள் ஓர் சமயம் ஸ்மிருதியிலிருந்தபடி யிருக்கிற தல்லவாவென்று சொல்வார்கள். அப்பேர்ப்பட்ட ஸ்மிருதியையும் இவ்விடத்திலே பிரஸ்தாபித்து அதன் சங்கையையும் தீர்க்கவேண்டுவதா யிருக்கிறது.

அதாவது, அஷ்டாதச ஸ்மிருதிகளையும் அது சம்பந்தமான உபஸ்மிருதிகளையும் கோடிகரித்து எழுதினவர் வைத்தியநாத தீக்ஷிதர். அவர்செய்த கிரந்தத்திற்கு ஸ்மிருதி முக்தாபல மென்றும், வைத்தியநாத தீக்ஷிதீயமென்றும் பெயருண்டு.

அதில் க்ஷத்திரிய வைசிய சம்பந்தமா யுண்டானவன் ரதகாரனென்றும், அந்த ரதகாரனுக்குப்

பரியாய நாமங்களாக தக்ஷன், சிற்பி, வர்த்தகி, லோககாரன், கர்மகாரன் என்றும், இவர்களுக்கு விதிவத்தாய உபநயன சமஸ்காரம் வேதாத்தியயனம், எக்ஞாதிகாரம், சிற்பசாஸ்திராதிகார முதலானதுக ளுண்டென்றும் சொல்லப்படுகின்றது.

இந்தப்பிரகாரம் உபநயன சமஸ்காரம் வேதாதிகாரம், யக்ஞாதிகாரமுள்ள ஜாதிகள் சிரேஷ்டர்களோ, அசிரேஷ்டர்களோவென்று புத்திமான்களானவர்கள் ஆலோசிக்கவேண்டும்.

தவிரவும், சூத்திரர்கள் வேதத்தைக்காதில்கேட்டால் அக்காதில் ஈயத்தை யுருக்கிவிட வேண்டுமென்றும், நாவினால்சொன்னால் ஜிஹ்வாசேதனம் செய்யவேணுமென்றும் மநு சொல்லுகிறார்.

இந்தப்படி சொன்னதினால் ரதகாரர் த்வைவர்ணிகாந்தர் பூதமென்றல்லவா ஸ்மிருதி வைத்தியநாததீக்ஷிதீயத்தின் அபிப்பிராயம்? இதையறியாதார் யாரிருக்கிறார்கள்.

இப்பேர்ப்பட்டவர்களே சுருதியில் எந்தப்பிரகாரம் சொல்லுகிறதென்று பார்த்தல்லவா ஸ்மிருதியை ஸ்திரப்படுத்தவேண்டும்.

சுருதிக்கு ஸ்மிருதி வித்தியாசமாயிருந்தால் சுருதிப்பிரமாணமென்றும் ஸ்மிருதி அப்பிரமாணமாகச் சொல்லவேண்டுமென்றும் மநு முதலியவர்கள் சொல்லுகிறார்கள்.

145763



45923
N17

இந்த ஸ்மிருதி முக்தாபல வைத்திபநாக தீக்ஷி தீயமும் இந்த விஷபத்தில் சுருதிக்கு விரோதமா யிருக்கிறதினால் இதுவும் நிராகரிக்கப்பட்டிருக்கி றது விஸ்வகர்மாவையும், விஸ்வகர்ம வம்சத் தையும் சுருதிமூலமாய்ப் பார்ப்போம். கிருஷ்ண யஜுர்வேதம் 4-6-6, கி. யஜு 4-2-16, கி. யஜு 2-5-1, கி. யஜு 4-3-5-ம் 6-ம் பஞ் சாதி விஸ்வகர்மாவானவர் சிருஷ்டி ஸ்திதி அந் தங்களுக்கு அதிகாரியென்றும், பிரஜாபதியென் றும், முழுமுதற் கடவுளென்றும் சொல்லியிருக் கிறது. அன்றியும் ததம் சமாகநிர்மாண கிருத்தி யத்தின்பொருட்டு அவர்புத்திரர் துவஷ்டாவென் றும் அவர் புத்திரர் விஸ்வரூப தேவ புரோகித ரென்றும், இவர்கள் ஆங்கீரச சம்பந்த முடைய வர்களென்றும், தத்வம்சம் பிரம்ம முகோத்பவர் களான சானகாதிகளின் கோத்திரர்களான விஸ் வப் பிராம்மணர்க ளென்றும் சுருதிகளிலும் சிரௌதங்களிலும் அநேகமாக சொல்லப்பட் டிருக்கிறது.

மேலும், விஸ்வகர்ம வம்சமொன்றுண்டென் றும், தத்வம்சம் பிராம்மணரென்றும், உபநயன சமஸ்காரஞ்செய்து குருகுலவாசஞ்செய்து வே தாத்யயனஞ் செய்தாரென்றும், ஸ்ரீ ஸ்காந்த புராணம் பஞ்சாசத் கண்டங்களில் காசிகாண்டம் 86-வது பிரிவிலும், தமிழ் அதிவீரராமபாண்டிய

மஹாராஜா வினல்பாடியகாசிகாண்டத்திலும்கூறப்பட்டிருக்கிறது. மேலும், சிற்பம் 32, உபசிற்பம் 32 இதின் அந்தர்க்கேதமான சிற்பங்கள் அனவதிகள். இவைகள் கோடானுகோடி கிரந்தசங்கியைகளாயிருக்கின்றன. இவைகளில் விஸ்வகர்மாவையும் தத்வமிசஸ்தர்களான விஸ்வப் பிராமணர்களையும் அவர்களின் கர்மானுஷ்டான விதிகளையும் சொல்லப்பட்டிருக்கிறது.

அன்றியும், உபநிஷத்துக்களிலும் இதிஹாசபுராணாதிகளிலும் அபரிமிதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்தப் பிரகாரம் சொல்லப்பட்டிருப்பதை கிஞ்சித்து முணராமல் சுருதிக்கு விரோதமாக எழுதினதைப் பெரியோர்கள் அங்கீகரிக்க மாட்டார்கள்.

இப்போது பிரஸ்தாபித்த விஸ்வப்பிராமண விஷயத்தைப்பற்றி அனேக கிரந்தங்களும் தீர்ப்புகளுமிருக்கின்றன. அவைகளில் சங்கிரகமானதாகச் சாலிவாகன சகாப்தம் 1797-வது யுவவருஷத்தில் மைலவரிப் பட்டணத்தில் பிரம்மஸ்ரீ விஸ்வ கர்மான்வய பாப்பய்ய அத்வரி அவர்களுக்கும் பண்டித சிகாமணிகளாகிய பிருந்தாவனம் பிராம்மணுளுக்கும் விஸ்வப்பிராம்மணீகத்தையும அவர்களின் ஆதான கர்மாதிகாரத்தையும் பற்றி

சாஸ்திரோக்தமாய் தர்க்கம் நடந்து விஸ்வப்பிரா ம்மணரென்று சொல்வது சுருதி ஸ்மிருதி இதி காச சிறப புராணங்களினால் ஸ்திரமாய்ப் பிரதி பாதிக்கிறதென்றும் ஆதானஞ் செய்கிறதற்கு ஸ்மிருதி இடங் கொடுத்திருக்கிறதென்றும அங் கீகாரஞ் செய்திருக்கிறார்கள்.

***

## அங்கீகாரஞ்செய்த வித்வாத்னங்களின் நாமதேயங்கள்.

மத்தூரிப்பட்டணம் சுப்பண்ணசிரௌதிகள்.
தேஜர்ல நாகேசுவர கனபாடிகள்.
ருயப்ரோலூர் யக்ஞன்னசாஸ்திரி [யாஜி.
சிந்தருண்டபாலிய அக்கிரகாரம் ருமச்சந்திர சோம
தாடெபல்லே நாகேசுவரசோமயாஜி.
கேதவரபு சோமயாஜி.
காஜா சோமயாஜி.
கல்லேபல்லே அக்கிரகாரய் மத்தூரி-சந்திரசேகர சய
னயாஜி. [தி
அவிஸகட்ட கிருமவாசிதங்கிருல் வெங்கிடாசலசிரௌ
சாடவர்த்தி அக்கிரகாரவாசி குண்டூர் சுப்பிரமணிய
சாக்னீவித் சோமயாஜி.
சுசுர்ல சிவராமசோமயாஜி.
கந்தெரிகிருமவாசி செருகுபல்லே ஜோகாவதானி.
சோமவர கிருமவாசி தமலூரி பிர்மாவதானி.
மையிலவரகிருமவாசி சொன்னபொட்டல யக்ஞன்ன
தீக்ஷிதர்.

நுசேடிகிருமவாசி திட்டகவி ஜோதிதீக்ஷிதர்.

சிரவேகிருமவாசி பமிடிமிரி வெங்கடாவதானிகள்.

வாக்கு பெலயந்திர கிருபகுடிகிருமவாசி சூரி. சுப்பிர மண்ணிய சோமயாஜி

ஆகிரிபல்லே கிருமவாசி பொம்பிகண்டி ஜோகி சோம யாஜி.

தங்கேரு கிருமவாசி உப்புலூரி வீமன்னசாஸ்திரிகள்.

கொத்தம்பாடி அக்கிரகாரவாசி சமரகொண்ட பிர்மய்ய சாஸ்திரிகள்.

மல்லேசிவரகிருமவாசிமண்டவல்லி வருகசாஸ்திரிகள்.

மண்டபாக் கிருமவாசி தேவகொண்ட வீரேசுவரசாஸ் திரிகள்.

முக்காமலகிருமவாசி பீஸ்பாட்டி வெங்கப்பசோமயாஜி

தொனேப்பூடி பிர்மாவதானி.

காகாபார்த்தகிருமவாசி சாமவேதிபாப்பய்யாவதானி

ஆகொண்டி அத்வைத பரப்பிர்ம சாஸ்திரிகள்.

தாடேபல்லே கிருமவாசி வாஜபேய யாஜுல் அப்பா வதானி.

இவ்விஷயம் சாங்கோபாங்கமாய்த் தெரிய விருப் புற்றவர்கள் சுருக்கமாயிருக்கிற விஸ்வகர்மான்வய பூஷ ணமென்ற கிரந்த புஸ்தகத்தில் பார்க்கலாம்.

த. கு. சுந்தராச்சாரியார்,
புதுப்பாளையத்தெரு, கும்பகோணம்.

⁂

(ஜனனுகூலன் தஞ்சாவூர், 20-5-11.)

(ஏப்ரல்மீ 8உ பத்திரிகையின் தொடர்ச்சி.)

மநுதர்ம சாஸ்திரம் முதலாவது அத்தியாயம் 35-வது சுலோகத்தின் அர்த்தம். 10 பிரஜாபதிகள் ஆதியிலுண்டானார்களென்றும், அதில் வசிஷ்டன், நாரதன் இவர்கள் மேற்சொல்லிய 10 பிரம்மாக்களோடு சேர்ந்தவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. இருக்வேதத்தில் விஸ்வகர்மாவென்னும் மநு பிரம்மாக்களாகிய மரீசீ, அத்திரி, அங்கிரஸ, புலஸ்திய, புசஹ், பௌலஸ்திய, கசியப, தக்ஷ, குக்குரு இந்த ஒன்பது பிரம்மாக்களும் விஸ்வப்பிரம்ம ஜாதியாகச் சொல்லியிருக்க இவர்களோடு தாசிவயற்றில் பிறந்த வசிஷ்டனும் வண்ணாத்தி வயற்றில் பிறந்த நாரதனும் எவ்விதமாகப் பிராமணர்களானார்களோ தெரியவில்லை.

மநு 9-வது அத்தியாயம் 321-வது சுலோகத்தின் அர்த்தம்.—ஜலத்தினின்று அக்கினியும், பிராமணனிடத்தினின்று க்ஷத்திரியனும் உண்டானதாகச் சொல்லியிருக்கிறது. யஜுர்வேத புருஷஸூக்தத்தில் பிரம்மாவின் முகத்திலிருந்து பிராமணனும், புஜத்திலிருந்து க்ஷத்திரியனும், பிறந்ததாகச் சொல்லியிருக்கப் பிராமணனிடத்தில் உற்பத்தியானவன் க்ஷத்திரியன் என்பது பேதகமாயிருக்கிறது.

மநுஸ்மிருதி முதல் அத்தியாயம் 100-வது சுலோகத்தின் அர்த்தமாவது,பிராமணன் முதல் வருணத்தானதினாலும் பிரம்மாவின் முகமாகிய உயர்ந்த விடத்தில் பிறந்ததினாலும், இந்த உலகத்தில் உண்டாயிருக்கிற சகல வருணத்தாருடைய பொருள்களையும் தானம் வாங்க அவனே பிரபுவாகிறான்.

ஞானவெட்டியான் அருளிய குலசங்கரமாலை.

பிர்மாவின் சேயரெனப் பேசு மவரிற்
றிரமொருவ னேனுமதைத் தேர்ந்திட் டிரவாமல்
வையகத்தி லப்பிரமன் வண்டொழிலைச் செய்தால்வே
றையமில்லை யென்போம் அவர்க்கு.

பிரம்மாவின் உயர்ந்த இடமாகிய முகத்தில் இவர்கள் பிறந்தது உண்மையானால் அவருக்குள்ள சிருஷ்டிக் கிருத்யமாகியத் தொழிலைத் தனது மைந்தருக்குச் சொல்லிவைப்பர். அவர் சொல்லவுமில்லை. இவர்கள் செய்யவுமில்லை. பிரம்மாவுக்கு நான்கு ஸ்தானங்களில் நான்கு புத்திரர்கள். பிறந்ததும், மூன்று புத்திர்களுக்கு அவசியமாகத் தொழில் ஏற்படுத்தி முகலில் பிறந்த புத்திரனை முட்டியெடுக்கச் சொல்வாரோ? சொல்லமாட்டார்.

மநுஸ்மிருதி மூன்றுவது அத்தியாயம் 125-வது சுலோகத்தின் அர்த்தம்:—சிரார்த்தத்தில்

விசுவ தேவர்களுக்காக இவரை நேமிக்கவேண்டியதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. விஸ்வ தேவர்களென்பது விஸ்வப் பிரம்மத்தினிடத்தில் பிறந்தவர்க்கே யன்றி விப்பிராளுக்கு அப்பெயருண்டோ? இல்லையே.

மநுஸ்மிருதி மூன்றாவது அத்தியாயம் 204-வது சுலோகத்தின் அர்த்தம்:—வெள்ளியினாலாவது வெள்ளிசம்பந்தப்பட்ட லோகத்தினாலாவது இலைபோடவேண்டியதென்று சொல்லப்பட்டிருக்கிறது. வெள்ளியிலை தானாக விளையக்கூடியதன்று விஸ்வப்பிரம்ம குலத்தார் பஞ்சகிருத்தியத்தினால் உண்டாவதேயன்றி விப்பிரர் கிருத்தியத்தினால் உண்டாவதில்லை. இவைகளை எல்லாம் கவனியாமல் ஸி. வரதாசாரியார் அய்யங்கார் என்ற பெயரைவிட்டு ஆசாரி என்றும், வைஷ்ணவபிராமணரெனப் பெயர் பூண்டவராக இருந்தும் வேதசாஸ்திரங்களைப் பரிசீலனம் செய்யாமல் காலப்புராட்டன் கட்டிய மநுஸ்மிருதியை முற்றிலும் பாராமல் சூத்திரனுக்கும் வைஸ்ய ஸ்திரீக்கும் பிறந்தவன் ஆயோகவன், ஆயோகவனுடைய தொழில் தச்சத்தொழிலென்றும் விளம்பரப்படுத்தத் துணிந்ததானது பூனை பாற்கடலை உண்ண முனைந்ததொக்கும். தச்சனென்றால் விஷ்ணு தொழிலென்றும், விஷ்ணுக்கு மாயனென்றும், தச்ச ஆசாரி

க்கு மயன் என்றும், தமிழ் வாக்கியத்தில் ஐந்து பிரம்மாக்களுக்கும் பெயர்.

(12-வது நிகண்டு,)

கருமனை மறுவர் கொல்லர் காட்டிய நாமமாகும், மருவினை யாளர்மற்ற மயனொடு தபதி தச்சர், பிரியுபொன் செய்யு கொல்லர் பொன்வினைமாக்கள் கட்டார், உரைகொளும் சொர்ணகாரர் அக்கசாலையரென்றோது

மேற்கூறிய கவியினால் விஸ்வப்பிரம்ம ஜாதியருக்கு சிருஷ்டி கிருத்தியமாகிய தொழிலினால் ஏற்பட்ட பெயரையன்றி வேத சாஸ்திர சம்மதமாகஎங்கள் ஜாதிப்பெயர் இதுவன்று. அது எப்படியென்றால், பார்ப்பாருக்கு அய்யர், அய்யங்கார், துவிஜன், இருபிறப்பாளர், ஜோதி சங்கமர் இன்னுமனேகவித பெயர் இருந்தும தாம் சொல்லிக்கொள்வது, அய்யா! நான் பிராமணன், எனவேத சாஸ்திர ஆதாரமில்லாமல் பிறருக்குச் சொல்வதுபோல நாங்கள் சொல்வதில்லை. விஸ்வகர்மா சிருஷ்டித்தாரென்று இராமாயணக்கதை பாரதக்கதை இன்னுமனேக சரித்திரங்களில் கூறியிருப்பதைப் பாமரர்களுக்குத் தெரியாமற் போனாலும பண்டிதர்களுக்குத் தெரியாதோ? விஸ்வகர்மாவென்னும் பெயருக்குச் சிருஷ்டித்தொழிலாகிய கிருத்தியம் இருப்பதினால் பிரம்மாவென்று பெயரு

ண்டாயிற்று. கருமாதிகாரமில்லாவிடில் பிரம்மா வெனச்சொல்ல வேதசாஸ்திர ஆதாரமில்லை. ஜகமே விஸ்வமயமாக இருப்பதாலும் விஸ்வப்பிராமணர் களென்று பெயருண்டாயிற்று.

ஞானவெட்டியார் குலசங்காமாலை வெண்பா.

வந்த குலமறைத்து மற்றோர் குலப்பெயர்கொண்
டந்தரமாய்ச் சீவனம்செய் யாசகரைச்—சந்ததமுந்
தெய்வம்போல் நம்பித் திரிவீருமக்கதனு
லெய்தும் வாராதோ இனி.

மேற்கூறிய வெண்பாவின்படிக்கு வந்த குலம றைத்து வசிஷ்டவியாசாதியைப்போல் ஜாதி உயர்த்தவில்லை. எங்கள் பஞ்சக்கிருத்தியத் தொழிலை இப்போது சில வகுப்பார்களில் விப்பிராள், வடுகர், மிராட்டியர், வேளாளர், துலுக்கர், அம்பட்டன் இன்னும் சில ஜாதியார்கள் செய்கிறார்கள். இவர்களுக்கு என்ன ஜாதிப்பெயர் சொல்வதென்று சிலர் விரும்புகிறார்கள். அச்சந்தேகத்தை ஸ்ரீ. வரதாச்சாரியார் நிவர்த்தி செய்வாராக. ஏனென்றால் ஜாதிவகுப்பும், தொழிலும், சாஸ்திரமும் தெரிந்தமையால் அவர்தான் சொல்லவேணும். ஆனால் தன்ஜாதி தனக்குத் தெரியவில்லை. அது விஷயம் விஸ்வப்பிரம்ம ஜாதியார்கள்தான் தெரியப்படுத்தவேண்டும். கலைக்கோட்டார் மான் வயிற்றில் பிறந்தவர், இவர் மான்குட்டி. ஜம்புகர்

நரி வயற்றில் பிறந்தவர், இவர் நரிக்குட்டி. கவுத மர் பசுவயற்றில் பிறந்தவர், இவர் மாட்டுக்கன்று, வால்மீகர் வேடனிடத்தில் பிறந்தவர், இவர் வேடன். வியாசர் செம்படச்சி வயிற்றில் பிறந்த வர், இவர் மீன்பிடிக்கும் செம்படவன். வசிஷ்டர் ஊர்வசி யென்னும் தாசி வயற்றில பிறந்தவர், இவர் தாசி மகன். நாரதர் வண்ணாத்தி வயற் றில் பிறந்தவர், இவர் வண்ணான். கவுண்டன்னி யர் முண்டச்சிவயற்றில் பிறந்தவர், இவர் முண்ட யர். மதங்கர் சக்கிலிச்சி வயற்றில் பிறந்தவர், இவர் சக்கிலியன். சாங்கியர் பறைச்சி வயற்றில் பிறந்தவர், இவர் பறையன். கார்த்திகேயர் கழுதை வயற்றில் பிறந்தவர், இவர் கழுதைகுட்டி. சௌ ணகர் நாயின் வயற்றில் பிறந்தவர், இவர் நாய்க் குட்டி. வபணமுனி அம்பட்டச்சி வயற்றில் பிறந்தவர், இவர் அம்பட்டன். பரத்துவாஸர் கருங்குருவி வயற்றில் பிறந்தவர், இவர் கருங் குருவி. இவர்களெல்லாம் கேவல ஜெந்துக்களி டம் ஜெனித்தும், வசிஷ்டருக்குப் பத்தினியோ அருந்துதி சக்கிலிச்சி, அவள் கற்பத்தில் பிறந்த புத்திராள் 101. நூற்றொருநுவரில் 4 பேர்களை விப்பிரளாகவும், மற்றோர்களைச் சண்டாளர்களா கவும வகுத்தும், பகவனென்பர் புங்கனூர் பறை ச்சியாகிய ஆதியைச் சேர்ந்தமாத்திரத்தில் பிற ந்த பிள்ளையாகிய திருவள்ளுவர், கபிலர், அதிக

மான் இவர்களில் திருவள்ளுவர் நீசராகவும், கபிலர் திருவாரூரில் விப்பிராளாகப் பூநூலணிய ஏற்படுங்கால் அவ்வூரிலுள்ள விப்பிறள் சூத்திரனென்று நூலணியக்கூடாதெனக் கண்டனம் செய்வதைக் கண்ணுற்ற கபிலர் தெய்வீக அறிவைக்கொண்டு விப்பிராளுடையப் பூர்வீகமும் தன்னுடைய அறிவின் சிறப்பைக்கொண்டு அகவல் பாடி கண்டனஞ்செய்து விப்பிராளைச்சம்மதிக்கச் செய்து நூலணிந்தனர். இது பண்டிதர்களறிந்த விஷயமே. ஷை கபிலரகவலில்.

ஒட்டியர் மிலேச்சர் ஞணர் சிங்களர் இட்டிடைச்சோனகர் யவனர் சீனத்தர் பற்பலர் நாட்டிலும் பார்ப்பாரிலையால்:—எனக்கூறி இருப்பதாலும் திருவள்ளுவர் ஞானவெட்டியில் எந்தன் குலத்தில் இபல்வான வேதியரே என்றும் கூறுகின்றனர். பிரம்மஞானியாகிய வேமன்னர் ஷை வச்சிரசூசியை அனுசரித்து வசிஷ்டரை தாசிவயற்றில் பிறந்தும் தன் பத்தினியோ சக்கிலிச்சியாயுள்ள யீன வசிஷ்டனென்று பிராமணனென சொல்வது தகாது என்று கூறியிருக்கிறது.

விஸ்வபிராமணஜாதி

த. சா. சுந்தராச்சாரியார்,

***

ஜனானுகூலன் தஞ்சாவூர், 3—6—11.

(மேமீ 20உ பத்திரிகையின் தொடர்ச்சி.)

மநுஸ்மிருதி 4வது அத்தியாயம் 5-வது 6-வது சுலோகத்தின் அர்த்தம்:—பிராமணன் எதினாலும்ஜீவிக்கலாம், சேவகாவிருத்தியானது தீனமாய்ப் பார்த்தாலும் எஜமானன் மிறட்டுக்கு உட்படுவதாலும், ஈனவேலை செய்வதாலும் நாயின் பிழைப்புக்குச் சரியானதால் சுகுணவிருத்தி என்று சொல்லப்படுகிறது. ஆகையால், இச்சேவகாவிருத்தியை நீக்கவேண்டியது. இது பிராமணன் விஷயம் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இச்சுலோகத்துக்கும் இப்பொழுதுள்ள அனுபவத்திற்கும் நேர்விரோதமாக இருக்கிறது. விப்பிரானில் சிலர் ஜீவனவிருத்திக்காக வேதங்களிற் சிலபாகத்தை அப்பியாசித்துக்கொண்டு கர்நாடக அரசர்களை ஏமாற்றிக் கைவசப்படுத்தித் தாங்களே பிரம்மகுலம், நான்குமதத்திற்கும்மோக்ஷவீட்டைக்காண்பிக்கும் மெய்க்குருவென்று போதனைகளைப் போதித்து தசதானத்தில் ஒன்றாகிய பூமியைத் தானங்கொடுத்தால் சொர்க்கத்திற்கு வழிகாட்டுவோமென்றார்கள். அதை மெய்யென்று நம்பி வேதசாஸ்திரங்களறியாத அரசர்கள் பூமியைக்கொடுக்கப் பெற்றார்கள். இந்தப் பொய்க்குரு சொர்க்கத்தை அரசருக்குக்காட்டுவது எத

ஸ்ன ஒக்குமென்றால். திரிசங்கு சொர்க்கம், பசிக் குப்பழைப துகொடு' பசியாத வாழும்; கையி னல் என்னைத்தூக்கிக் கால்வாய்தாண்டி விட்டால் ஆகாயத்திற் பறக்கும் வித்தையைப் போதிப்பே ன் எனச்சொல்லி யாசித்து ஜீவித்தார்கள். இப் போது நீதியுள்ள ராஜாங்கத்தில் சோம்பேறிக ளாகிய விப்பிராளும் வேதம்கற்ற விப்பிராளுக் கும் மான்னியம் கிடைப்ப தரிதாகையால் வட மொழியைவிட்டு ஆங்கிலேய பாஷையை அத்தி யயனம் செய்து 1 உத்தியோகம் நடத்துகிறார் கள். ஜில்லாவுக்கு ஐந்துபேர்கள் துரைமார்களும் மற்றுள்ளோர் விப்பிரர்களும் அதிகாரிகளாக இருப்பது யாவருமறிந்த விஷயமே. ஆனகா ல், மநுஸ்மிருதியில் சுலோகங்கள் முன்னுக்குப் பின் அநந்த பேதகம் இருக்கிறது. அவர் சிற்சில தைத் தெரிவித்தேன். சுருதியென்றால் வேதம் ஸ்மிருதியென்றால் வேதத்திற்குச் சமமாக இருப் பது ஸ்மிருதியாகும். இஞ்சிற்றும் சுருதி யுக்தி அனுபோகத்திற்கு ஒற்றுமையில்லை. ஆதி மநு வாகிய சுவாயம்பு மநு விஸ்வப்பிராமண ஜாதி யாக இருந்தும் அவர்களால் செய்த மநுஸ்மிருதி என்ற சட்டத்தில தன் ஜாதியார்களை இகழ்ந் தும், யாசித்து ஜீவனம் செய்யக்கூடிய சங்கர ஜாதியார்களை உயர்ந்த பிராமணரென்றும் எழு துவாரோ? எழுதமாட்டார். ஓர் சட்டத்தை ஏற்ப

டுத்தக்கூடியவல்லான் வேதசாஸ்திரங்கள் உணர்ந்துதான் சட்டங்கள், ஜாதிப்பிரிவினை ஆதியில் வகுத்திருப்பர். மநுநீதி மன்னவராக செங்கோல் நடாத்திபும் சகலமும் வகுத்த மநுப்ரமன் வேதத்திலுள்ள விஸ்வப்பிரம்மஜாதியர்களைத் தூஷணித்தும் வேதசாஸ்திரங்களில் முறையிடா ஜாதியராகிய விப்பிரரைப் பூஷணையாக எழுதமாட்டார். எழுதினது உண்மையானுல் விப்பிராள் பூர்வீகமும் முகோற்பத்தி ஸ்தானங்களும் கோத்திரம் சூத்திரம் சாகை பிரவரையாதியும் வேதங்களிற் கூறுவிடினும் இவர்களை சிரேஷ்ட்டமாய் எழுதியமநுப்பிரம்மனும்எழுதவில்லை. விப்பிராள் பூர்வீகமும் உற்பத்தி ஸ்தானங்களும் வச்சிரசூசி பிரமாணத்திற் சலப்பு ஜாதியர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி கிரந்த நூலாகிய வச்சிரசூசியில் இருபிறப்பாளராகிய பார்ப்பாரைத் தூஷணையாகக் கூறி இருக்கவேண்டியதென்ன? யாவையும் வகுத்த மநுவானர் இந்நூலை அறியவில்லையோ? தெரிந்தும் மறைத்து விப்பிராளைப் பூஷணையாக எழுதினரோ? அப்படிக்கு எழுதுவாராகில் அவர் விசேஷித்து எழுதிய மநுஸ்மிருதிக்கும் அவரறிவுக்கும் குறைவு ஏற்படும். ஆனதால், மநுப்பிரமன் இவ்விதம் எழுதியிரார். விஸ்வப்பிரம்ம வம்சத்தார்களை சூத்திரவர்க்கத்தில் சேர்ந்தவர்களென்று அமரத்தில் சொல்லி

இருப்பதாக ஸி. வரதாசாரியார் பேப்பரில் பிர சுரித்திருக்கிறார். பௌத்தனென்று சொல்லப் பட்ட அமரனென்பவர் விஸ்வப்பிரம்ம குலத்தா ரிடம் கழுவிலேற்றிய பொறுமையால் இயற்றிய அமரநிகண்டுவில் விஸ்வப்பிரம்ம வம்சத்தார்களே சிரேஷ்டமாகவே எழுதி இருக்கிறார். அச்சு லோகம் அடியில் வருமாறு காண்க:—

சுலோகம்.

கௌதமஸ்சார்கபந்துஸ்ச
மாயாதேவி சுதஸ்சஸ:
விஸ்வகர்மாஸதாநந்தோ
பஞ்சாஸ்யோமேருநிமிர்த்:
பஞ்சப்பிரம்மாதிருசஸ்ஸிசாத்
மல்விகாம்பரவாஹந:
மைத்ராவருணசித்சைவசோ
த்ருவபாலோஜெகத்குரு:
சம்புசாக்ஷிபஞ்சவேதி
ததாதஸ்யமுகோத்பவ:
மநுர்மயாஸ்த்வஷ்டாச
சில்பிவிஸ்வக்யமூர்த்தய:
கம்ஸாலோஸ்ரீஹரேதஸ்மா
ப்ராம்மஞோஹரிகேதன:
ப்ராம்மாத்மபூசநஜ்யேஷ்டஹ:
பரமேஷ்டிபிதாமஹ:

இந்தச் சுலோகங்களில் விஸ்வப்பிராமண ஜாதியாரை விஸ்வகர்த்தாக்களென்றும், சதானந்தர்கள் என்றும், மகாமேருவை நிர்மித்தவர்களென்றும், ஆதிதேவர்களாகிய பஞ்சதர்மாக்களென்றும், மேகவாகனர்களென்றும், துருவபாலவரென்றும் பஞ்சமுகோற்பவர்களென்றும், பருமயதிவஷ்ட சிற்பி விஸ்வக்ஞர்களென்றும், கம்மாளர்களென்றும்,பிராமணர்களென்றும் சொல்லியிருக்கிறது. இவ்விதமாக அமரத்திற்கூறிய ஜாதி சிரேஷ்டமானதா? அல்லது சூத்திரஜாதியில் சேர்ந்ததாவென்று பண்டிதாள் கவனிக்க வேண்டும். அமரத்தில் தற்காலம்வழங்கிய பார்ப்பாரை துவிஜாளென்றும், இருபிறப்பாளரென்றும், தூஷணித்திருக்கிறதேயன்றி இவர்களைப் பிராமணரென்று சொல்லப்படவில்லை. எங்களுக்கு விரோதிகளான சங்கரஜாதி பார்ப்பார் மநுஸ்மிருதியிலும் அமர நிகண்டிலும் இன்னும் சில கிரந்த காவியங்களிலும் விஸ்வப்பிராம்மண ஜாதியார்களை சிரேஷ்டாளென்று பூஷணையாக எழுதி இருப்பதைக் கண்ணுற்று மனம் பொறுக்கமாட்டாமல் எங்களைப்பற்றிய உயர்வான சுலோகங்களை முற்றிலும்எடுத்துவிட்டு எங்களை நிந்தையாகப்பொய்ச் சுலோகம் இயற்றிச் சேர்த்து இருக்கிறார்கள். ஆனதால், ஸி. வரதாச்சாரியார் சாக்ஷியம் கொடுத்த இரண்டு நூலாகிய மநுஸ்மிருதியும், அமரசி

ர்ம நிகண்டும் கிரந்த அந்நூல் ஆசிரியர் இயற்றிய அசலல்ல. இப்போது அச்சிடலான இரண்டு நூல்களும் விப்பிராள் விஸ்வப்பிராமணாளிடத்தில் இரவில் எழுத்தாணிவாங்கி எழுதின மோசடியான புராணக்குப்பையாகும். தர்ம சாஸ்திரம் என்றபெயரைமாற்றி அதர்மசாஷ்திரமாகச் செய்துவிட்டார்கள். கர்நாடக ராஜாக்களைத் துர்ப்போதனைசெய்து கைவசப்படுத்தி இவர்கள் குருவாக இருந்தும் இவர்கள் உபதேசத்தினால் சிலர்கள் அரசுமிழந்து விப்பிராள் குருத்துவமும் மழுங்கிவிட்டது. ஜாதிப் பிரிவினைகள் செய்து ஒற்றுமையில்லாமல் உலகத்தில் கலகத்துக்கு வித்தாய்த் தோன்றி சோழமண்டலத்தைக் கெடுத்ததன்னியில் சேரன் பாண்டி நாட்டிலும் குருத்துரோகிகளான விப்பிராள் இந்த நீதியுள்ள ஆங்கிலேய ராஜாங்கத்தில் கலகத்திற்கு முயல்வதால் இந்த துராபிமானிகளுக்குச் சமாதானம் செய்வதற்கு பினல்கோர்ட்டு ஆக்ட்டு ஆஜராகிஇருப்பதையறியவில்லை. சேலம்ஜில்லா கடத்தூர் ஸி. வரதாசாரியார் சட்டங்கள் தெரிந்தும், வக்கீல் வேலை பார்த்தவராக லெட்டர்மூலமாய்த் தெரிகின்றபடியால் இவரறிவு குறுகி விஸ்வப்பிராமண ஜாதியார்கள் பூர்வீகம் சாக்ஷியமூலமாக எல்லோரும் அறிவார்களோ அறியமாட்டார்களோ என்ற ஆவலுற்று ஓர் சந்தேகமென நாமஞ்சூட்டி பேப்பரில் பிரசு

ரிக்கலானது. தான்போக வழியில்லாதவன் மத்தளத்தை மாட்டிக்கொண்டு போனதுபோலாகும் இவர் வம்ஸாவளி அறியவில்லை. இவரைப்போல் எச்சாதியிலும் துராபிமானிகளுக்கு இதுஓர் எச்சரிக்கையாக எழுதப்புகுந்தது. இது பரியந்திரம் நான் ஐந்துவாரம் பேப்பரில் எழுதியிருக்கிறேன். பதிலில்லை. ஆனதால் வாதாசாரிக்கு நோட்டீஸ் அனுப்பி நோட்டீஸ் விஷயமும் பேப்பர் மூலமாய் வெளியிடப்படும்.

(இன்னும் வரும்)

விஸ்வப்பிராமணஜாதி சா. சுந்தராச்சாரியர்,
நாணயக்கார செட்டித்தெரு,
தஞ்சாவூர்.

## முக்கிய கவனிப்பு.

இவ்விதமான புத்தகங்கள் ஏற்படுவதற்குக் காரணம் என்னவென்றால்:—பார்ப்பார்களென்று சொல்லப்பட்ட விப்பிரஜாதியாருக்கு விஸ்வகர்ம வம்சத்தார்கள்பேரில் ஏற்பட்டுள்ள பொறாமை என்பது இவ்விப்பிரர்களை விஸ்வப் பிராமணர்கள் யாதொரு கெடுதியும் செய்யாமலிருந்தும் இவர்களுடைய துர்க்குணம் இப்படி யிருக்கிறது.

இவைமட்டுமல்ல; இதற்கு முன்னும் இதுபோன்ற அநேக வம்பு வழக்குகள்செய்து அதுகளெல்லாம் விஸ்வகர்மாக்களே ஜெயமடைந்திருக்கிறார்கள். அதுகளின் விபரம் கீழ்வருமாறு:—

இரதகாராதிகரண விசாரம் (தெலுங்கு பதிப்பு)
சித்தூர்ஜில்லா அதாலத்து கோர்ட்டுதீர்ப்பு.
விஸ்வகர்மான்வய பூஷணம்.
சேலம்ஜில்லா தீர்ப்பு.
பந்தர் அபிஷேகத்தீர்ப்பு.
வேலூர் தீர்ப்பு.

இன்னும் இதுபோன்ற அநேக புஸ்தகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதுகளை யெல்லாம் வாங்கி வாசித்துப் பார்த்தவர்களுக்கு இதன் உண்மை இன்னதென்று விளங்கும்.

145763

# விஸ்வகர்ம புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| தொழில் பத்திரிகைக்கு வருட சந்தா ரூபா | 3 | 0 |
| விஸ்வகர்ம பக்தோபாக்யானம் | 1 | 0 |
| சிற்பசிந்தாமணி | 1 | 12 |
| விஸ்வப்பிரம்ம புராணவசனம் | 0 | 8 |
| விஸ்வகுரு சதகம் உரையுடன் | 0 | 6 |
| இராமசுனர் சரித்திரம் | 0 | 6 |
| சேலம் தீர்ப்பு | 0 | 6 |
| விஸ்வகர்மாநுஷ்டான வேதமஞ்சரி | 0 | 2 |
| வேலூர் தீர்ப்பு | 0 | 2 |
| பந்தர் அபிஷேகத்தீர்ப்பு | 0 | 1 |
| குலசங்கரமாலை | 0 | 1 |
| நித்தியகர்மச் சுருக்கம் | 0 | 1 |
| சென்சஸாபாஸ முக்கிய கவனிப்பு | 0 | 1 |
| சித்தூர் தீர்ப்பு | 0 | 6 |
| தேவிகட்கமாலை தமிழ் தெலுங்கு ஒரேபுத்தகம் | 0 | 2 |
| மாங்கைநகராதிபதி சதகம் உரையுடன் | 0 | 6 |
| விஸ்வகர்மாந்வய பூஷணம் | 0 | 2 |
| பரசமயகோளரியார் பிள்ளைத்தமிழ் | 0 | 4 |
| ஸ்ரீ விஸ்வேஸ்வரர் படம் | 0 | 4 |
| ஸ்ரீ விஸ்வேஸ்வரர் யந்திரம் | 0 | 4 |
| ஸ்ரீ விஸ்வேஸ்வரர் படம்போட்ட போஸ்டு [illegible] 100-க்கு | 0 | 12 |
| கலைவாணி சதகம் | 0 | 2 |
| மதுரைத் தமிழ்ப் பஞ்சாங்கம் | 0 | 2 |
| விஸ்வேஸ்வரபகவான் கீர்த்தனை | 0 | 2 |

## தெலுங்கு பதிப்பு.

| | | |
|---|---|---|
| ராஜ…ஷப்பிரயோகம் | 1 | 0 |
| மூலஸ்தம்பம் | 0 | 8 |
| விஸ்வகர்மாநுஷ்டான வேதமஞ்சரி | 0 | 6 |
| இரதகாராதிகாரவிசாரம் | 0 | 8 |
| விஸ்வகர்ம சதகம் | 0 | 4 |
| பத்ராத்ரி ராமசதகம் | 0 | 4 |

கொ. கன்னியப்ப ஆச்சாரி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.